10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 321 செவ்வாய்க்கிழமை 10 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18



## பிரதமர் பதவியை நிராகரித்த ராஜித

கொழும்பு,ஏப்.10

'பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட காலப் பகுதியில், என்னைப் பிரதமர் பதவியில் அமர்த்துவதாக சிலர் ஆசை 06▶

## சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப்.10

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் நேற்றுச் சந்தித்துப் பேசினார். (அ)

## பன்றித்தலைச்சியம்மனுக்கு பங்குனிப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.10

வரலாற்றுச் சிறப்புமிக்க தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் ஆலயத்தின் பங்குனித் திங்கள் பொங்கல் விழாவின் இறுதித் திருவிழா நேற்று சிறப்புற நடைபெற்றது. இதன்போது ஏராளமான பக்தர்கள் பொங்கல் பொங்கி, காவடி எடுத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி கண்ணகி அம்மனை வழிபட்டனர். (அ)



## புலிகளின் ஆயுதங்கள் முள்ளிவாய்க்காலில்

நேற்று மீட்பு



முல்லைத்தீவு , ஏப்.10

தமிழீழ விடுதலைப்புலிகளால் புதைத்து வைக்கப்பட்டதாக நம்பப்படும் பெருந்தொகையான வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் என்பன முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் 06▶

## வடக்கு மாகாணசபையின்
# அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் சுமந்திரன்?



யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக, கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் களமிறக்கப்படவுள்ளார். இந்தத் தகவல் கூட்டமைப்பின் உயர்மட்டத்தில் இருந்து கசிந்துள்ளது. இதனையடுத்து தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா கடும் அதிருப்தியில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போது சுமந்திரன் இந்த விடயத்தை மறைமுகமாகச் சுட்டிக் காட்டியிருந்ததாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில், "அடுத்த வடக்கு 06▶

## மகிந்த அணியுடன் இணைகிறதா சு.க?

கொழும்பு,ஏப்.10

" அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது மகிந்த அணியினருடன், சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் இணைந்து எதிர்வரிசையில் அமர்ந்து கொள்வார்கள்" என இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மீண்டும் தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த அனைவரும் எதிர்க் கட்சி வரிசைக்கு சென்று அமர்ந்து கொள்வோம்.

இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா 06▶

## கேடயத்தைத் தகர்த்து கரைச்சியில் 'வீடு' வாகை

சு.க, ஐ.தே.கவும் ஆதரிப்பு

கிளிநொச்சி, ஏப்.10

பெரும் பரபரப்புக்கு மத்தியில் கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கைப்பற்றியுள்ளது. தாமே ஆட்சியமைப்போம் என்ற கனவு தகர்ந்ததால், சபை நடவடிக்கை முடியும் 06▶



## தமிழும் அரசமொழி: விரைவில் சட்டம்

கொழும்பு, ஏப்.10

தமிழ் மற்றும் சிங்கள மொழியை அரச கரும மொழிகளாக்கும் வகையில் 21ஆவது திருத்தச் சட்ட மூலம் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். 06▶

## 20 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஜூன் மாதம் அரச நியமனம்

கொழும்பு, ஏப்.10

வேலையற்ற 20,000 பட்டதாரிகளுக்கு அரசபணியை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைத்துக்கொள்வதுடன், அவர்களுக்கு 2 வருட பயிற்சியும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கான கொடுப்பனவை வழங்கவுள்ளதுடன், இவர் 06▶




கொழும்பு, ஏப்.10

இலங்கையில் மாணவன் ஒருவர் பறக்கும் ஹெலிகொப்டர் ஒன்றைச் சுயமாகத் தயாரித்து சாதனை படைத்துள்ளார்.

திம்புலாகல, அரலங்வில விலயாய மத்திய 06▶

## வடக்கு, கிழக்கில் 50,000 வீடுகள்

இன்று ஒப்பந்தம் வழங்கல்

கொழும்பு, ஏப்.10

வடக்கு, கிழக்கில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள 50 ஆயிரம் வீடுகளுக்கான ஒப்பந்தம், இந்த வார இறுதிக்குள் வழங்கப்படவுள்ளது.

இன்று கூடவுள்ள கேள்விகோரல் சபை, ஒப்பந்தத்தை வழங்கும் என்று தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. 06▶

# களியாட்ட நிகழ்வை எதிர்த்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்






வவுனியா, ஏப். 10

வவுனியா மாவட்டச் செயலகம் இராணுவத்தினருடன் இணைந்து நடத்தும் களியாட்ட நிகழ்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஊடகங்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்தும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி அறியும் சங்கத்தின் ஏற்பாட்டில், 410 ஆவது நாளாகவும் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு அருகில் புத்தாண்டுக் கொண்டாட்டதை முன்னிட்டு இராணுவத்தால் களியாட்ட நிகழ்வு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"களியாட்ட நிகழ்வுகளுக்கான ஏற்பாடு எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகிறது. இந்தக் களியாட்ட நிகழ்வுகளுக்கு ஆதரவு வழங்குபவர்கள் எம்மையும் தமது தாய்மாராக யோசிக்க வேண்டும். ஏற்கனவே நொந்து போயிருக்கும் எமக்கு இவ்வாறான செயற்பாடுகளால் மேலும் வேதனை ஏற்பட்டுள்ளது." என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாணத்தில் 30 வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்: 10


யாழ்ப்பாணப் பாதுகாப்பு படைத்தலைமையகத்தால் தெல்லிப்பழை பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 30 வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவால் இந்த வீடுகள் திறந்துவைக்கப்பட்டு பயனாளிகளிடம் திறப்புகள் வழங்கப்பட்டன.


யாழ்ப்பாணப் பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் பொறியியலாளர்களின் பங்களிப்புடன் ஐந்து மாதங்களில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. இந்த நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான வசதிகள், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், இந்து சமய விவகார அமைச்சு ஆகியவையால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். (ஆ)

## 'உளறல்கள்' கவிதை வெளியீட்டு விழா









சங்கானை , ஏப். 10

எஸ்.ரி.திஸ்னுகனின் 'உளறல்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழா நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து கொண்டு கவிதைத் தொகுப்பை வெளியிட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை இ.றெனேக்சனும், நூல் மதிப்புட்டுரையை அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரனும், வெளியீட்டுரையை வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.குகதாசனும், வாழ்த்துரைகளை மானிப்பாய் இந்துக்கல்லூரி சிரேஸ்ட ஆசிரியர் ஞான திருக்கேதீஸ்வரன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் மதுசுதனன் ஆகியோரும் வழங்கினார்கள்.

## புலிகளின் காலத்திலேயே பெண்களுக்கு பாதுகாப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 10

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் பெண்களுக்கு முழுமையான பாதுகாப்பு இருந்தது. அப்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகளோ, துஷ்பிரயோகச் சம்பவங்களோ இடம்பெறவில்லை என வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

பெண்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்வது குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை செயலமர்வு ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஆயுதப் போராட்டம் முற்றுப்பெற்ற பின்னர் தாயகத்திலும், புலம் பெயர் தேசங்களிலும் குடும்ப விவாகரத்துகள் அதிகரித்து வருகின்றன. இனத்தின் விடுதலைக்காக நடத்தப்பட்ட போராட்டம், குடும்ப வாழ்விலும் பாதுகாப்பான நிலையையே தோற்றுவித்தது. பெண் பிள்ளைகளுக்கான முதல் பாதுகாப்பாக அவர்களது பெற்றோரே இருக்க முடியும். அதற்கேற்றவாறான சூழலை ஒவ்வொரு பெற்றோரும் வீட்டில் ஏற்படுத்துவது அவசியமாகும். பெண் பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்த அக்கறையின் வெளிப்பாடாக பெற்றோர் வெளிப்படுத்தும் கட்டுப்பாடுகள் சில வேளையில் கடுமையானதாக பிள்ளைகளாகிய உங்களின் பார்வையில் படலாம். ஆனால், அது உங்களின் பாதுகாப்பிற்கானதென்பதை உணர்ந்து கொள்வது அவசியம். நீங்களும் பெற்றோர் என்ற நிலைக்கு வரும் போது இதனை நன்கு உணர்ந்து கொள்வீர்கள்.

எமது கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களுக்கு அமைவாகப் பெண் பிள்ளைகளின் செயற்பாடுகள் அமைய வேண்டும். இதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். அந்த வகையில் பெண் பிள்ளைகளை வழிநடத்தி செல்வதுடன் அவர்களுக்கான பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தும் பொறுப்பு பெற்றோர் மற்றும் ஆசிரியர் சமூகத்துக்கே உண்டு. இந்தக் கூட்டுப் பொறுப்பை உணர்ந்து செயற்படுவதன் மூலமே பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்கள் அற்ற சூழலை எமது பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

பெண்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் எந்த வேளையிலும் நடமாடும் சூழல் தொடர்பான தேசியத் தலைவர் பிரபாகரனின் இலட்சியத்தை கிராம மட்ட செயற்பாடுகளின் மூலம் தொடர்ந்தும் முன்னெடுக்க உள்ளோம். " என்றும் அவர் தெரிவித்தார்.





எதிரொலி
Ethiroli
செவ்வாய். 10 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

## கேள்விக்குறியா? ஆச்சரியக்குறியா?

கடைசியாக ஒளிந்திருந்த பூனைக்குட்டி வெளியில் வரப் போகின்றது. சுமந்திரன் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நிற்பது ஏறக்குறைய உறுதியாகி விட்டது. ஆக மொத்தம், இப்போதைய முதலமைச்சருக்கு எதிராக சுமந்திரன் ஏன் காய் நகர்த்தினார் என்பதற்கு விடை கிடைத்துவிட்டது. ஆனால் சுமந்திரன் நினைப்பது போல, அவர் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக வரமுடியுமா என்பது கேள்விக்குறிதான்.

கடந்த தேர்தலிலேயே மாவை சேனாதிராசாவே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட இருந்தார். ஆனால் கடைசிக் கட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும், நீதியரசர் விக்னேஸ்வரனை எவரும் எதிர்பார்க்காத வகையில் களத்தில் இறக்கினர். அவரைக் காய்வெட்டி, மாவையை முதலமைச்சர் வேட்பாளாராக்க வேண்டுமென தமிழரசுக் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் அழுத்தம் கொடுத்தபோதும், சம்பந்தனும், சுமந்திரனும் தங்கள் முடிவில் இம்மியளவும் அசைந்து கொடுக்கவில்லை. அவர்களின் பிடிவாதமே வென்றது. முதலமைச்சர் கனவில் இருந்த மாவை சேனாதிராசாவுக்கு இந்த முடிவு உவப்பானதாக இருக்கவில்லை. கட்சித் தலைமை மீது அவர் அதிருப்தி அடைந்து இருந்தமையால், மாவைக்கு 'ஐஸ்' வைக்கும் விதமாக தமிழரசுக் கட்சியின் தலைவராக்கப்பட்டார்.

என்னதான் சம்பந்தர், மாவை சேனாதிராசாவை கூலாக்க முயன்றாலும், முதலமைச்சர் பதவி கிடைக்காத 'வெப்பிராயத்தில்' அவர் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் புழுங்கவே செய்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் தான், தனக்கு நெருக்கமான தரப்பினரிடம், " சுமந்திரனையே முதலமைச்சராக்கியிருக்க வேண்டும். ஆனால் அரசியலில் அனுபவம் குறைவு என்பதால் இம்முறை விக்னேஸ்வரனை நியமித்தோம்" என்று சம்பந்தர் சொன்ன வார்த்தைகள் சுமந்திரனை எட்டிவிட்டன. அவ்வளவுதான், அடுத்த நொடியே அவர் முதலமைச்சராவதற்கான காய் நகர்த்தல்களில் இறங்கிவிட்டார்.

இதன் பின்னரே தனக்குச் சார்பான மாகாண சபை உறுப்பினர்களின் அணியொன்றை அவர் உருவாக்க அல்லும் பகலும் பாடுபட்டார். அப்படி சுமந்திரனுக்கு விசுவாசமான மாகாண சபை அணி ஒன்று உருவானதும், அதன் மூலம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது சேறு பூசும் படலம் ஆரம்பமானது. முதலமைச்சருக்கு எதிராக தமிழரசுக் கட்சி நேரடியாக விமர்சனங்களை முன்வைத்தது. இதற்கு மாவையும் மறைமுக ஆதரவு கொடுத்தார். அவருக்கு பதவி கிடைக்கவில்லை என்ற புகைச்சல். தமிழரசுக் கட்சியின் உயர்மட்டத்தின் சுமந்திரனும், மாவையும் தமக்கே அடுத்ததாக முதலமைச்சர் பதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கட்சியின் நடவடிக்கைகளை முன்னெடுத்ததுதான் வேடிக்கையின் உச்சக்கட்டம்.

இப்போது இலவு காத்த கிளியாக இன்னொரு தடவையும் மாவை சேனாதிராசாவின் முதலமைச்சர் பதவிக் கனவு பறிபோகும் சாத்தியங்களே அதிகம் தென்படுகின்றன. ஆனால், முதலமைச்சர் வேட்பாளராக சுமந்திரன் களமிறக்கப்பட்டால் அவரை மக்கள் தெரிவு செய்வார்களா? அப்படித் தெரிவானாலும் முன்னரைப் போல இப்படி அதிக ஆசனங்களைக் கூட்டமைப்பு பெறப்போவதில்லை. அப்படியான நிலையில் தெரிவான கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள் சுமந்திரனை முதலமைச்சராக ஏற்றுக் கொள்வார்களா? என்பதெல்லாம் கேள்விக்குறிகள் தான். ஆனால் சுமந்திரனின் சாணக்கியமும், சதிகளும் கேள்விக்குறிகளை ஆச்சரியக்குறிகளாக மாற்றினாலும் ஆச்சரியமில்லை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# சாவகச்சேரியில் இயங்கும் சட்டவிரோதப் பண்ணை






சாவகச்சேரி, ஏப்.10

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட உதயசூரியன் கிராமத்தில் நகரசபையின் அனுமதி பெறப்படாமல் சட்டத்துக்கு முரணான வகையில் தனியார் ஒருவர் நூற்றுக்கணக்கான மாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளை வளர்த்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நகரசபை தவிசாளர், உபதவிசாளர், நகரசபை செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் உதயசூரியன் கிராமத்தின் குறைகளைப் பார்வையிடச்சென்றபோதே பிரதேச மக்கள் இந்த சட்டவிரோதமாக பல சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வரும் பண்ணையை நகரசபையினரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இந்தப் பண்ணையைச் சூழவுள்ள குடிமனைகளுக்குள் பண்ணையில் இருந்து வரும் கழிவு நீர் உட்புகுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் அனுமதி பெறப்படாமல் பாரிய உயரத்துக்கு காற்று உட்புகாதவாறு சுற்றுமதில் அமைத்து அதற்குள் கால்நடைகளை வளர்த்து வருவதாகவும், இதனால் அதன் உள்ளே கால்நடைகள் கொல்லப்படும் சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நகரசபையினர் விரைந்து செயற்பட்டு அனுமதி பெறமால், சட்டவிரோதமாக குடிமனைக்குள் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தும் வகையில் உள்ள பண்ணையை அகற்ற நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். கடந்த நகரசபையினரின் ஆட்சிக் காலத்திலேயே இந்த அனுமதி பெறப்படாத பண்ணை தலையெடுத்ததாகவும், இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும் எனவும் அதனை முன்னர் ஆட்சியில் இருந்த சபையினர் செய்யத் தவறிவிட்டனர் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## காட்டுக்குள் மாயமான 7 இளைஞர்கள் மீட்பு

கொழும்பு, ஏப்.10

நக்கில்ஸ் வனப்பகுதியைப் பார்வையிடச் சென்று காணாமற்போயிருந்த 7 இளைஞர்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாம் வழித்தவறிச் சென்றுள்ளதாக குறித்த இளைஞர் குழுவைச் சேர்ந்த ஒருவர் தனது வீட்டாருக்குத் தொலைபேசி மூலம் அறிவித்திருந்தார்.

உடனடியாகச் செயலில் இறங்கிய வீட்டார் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் அளித்தனர். இதனையடுத்து இவர்களைத் தேடும் பணியில் பன்வில, ரங்கல, உடுதும்பர, லக்கல மற்றும் இரத்தோட்டை ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸார் இணைந்து தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுப் பிற்பகல் வேளையில் அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கதிரைகளோடு நடந்த ஒருங்கிணைப்புக் கூட்டம்

முல்லைத்தீவு , ஏப்.10

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கான ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இணைத்தலைவர்கள் மூவர் கலந்து கொள்ளாமையால், நேற்றை கூட்டம் பயனற்றதாக மாறியதாக மக்களும், அதிகாரிகளும் விசனம் தெரிவித்தனர்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மட்டுமே கலந்துகொண்டிருந்தார். ஏனைய இணைத்தலைவர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் ரிசாட் பதியுதீன், டி.எம்.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. இதனையடுத்து இணைத் தலைவர்களின் வெற்று ஆசனங்கங்களுக்கு முன்னால் சம்பிரதாயத்துக்கு கூட்டத்தை நடத்தி முடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# புதிய திட்டங்களோடு இலங்கையில் சீனா

## பேச்சுவார்த்தைகள் தீவிரம்

கொழும்பு, ஏப்.10

இலங்கையில் மிகப்பெரிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பேச்சுகள் முன்னெடுக்கப்படுவதாக சீன அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இயற்கை எரிசக்தி நிலையத்தை அமைத்தல், மசகு எண்ணெய் சுத்திகரிப்பு, சிமெந்து, உருக்கு மற்றும் இரும்பு உற்பத்தி ஆகிய துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் இந்தப் பேச்சுகளில் அவதானம் செலுத்தியுள்ளதாக, சீனத் தூதுவர் செங் சியுவான் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்றிட்டங்கள் ஊடாக உள்நாட்டு பொருளாதாரத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியுமெனவும், மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நாட்டின் அபிவிருத்தியிலும் பாரிய முன்னேற்றங்களை காணமுடியுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டில இடம்பெற்ற யுத்தம் தேசத்தின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி ஆகியவற்றை பல வகையிலும் பாதித்ததாக சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா ஏற்கனவே இலங்கையின், துறைமுகம், அதிவேக நெடுஞ்சாலை, விமானநிலையம், நிலக்கரி மின்னுற்பத்தி உள்ளிட்ட பல செயற்றிட்டங்களில் தமது பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும், சீன நிறுவனங்கள் சுமார் 15 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உட்கட்டுமான செயற்றிட்டங்களை இலங்கையில் நிறைவு செய்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)



## இன்று நாளும் கோளும்

10.04.2018 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 27 ஆம் நாள்

| | | |
|---|---|---|
| தசமி முழுவதும் | திருவோணம் மு.ப. 10.53 வரை | குளிகை 12.00-01.30 |
| இராகுகாலம் 03.00.- 04.30 | சுபநேரம் காலை 07.30 - 08.30 | எமகண்டம் காலை 09.00 - 10.30 |

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைதி | ஆர்வம் | உயர்வு | பாசம் | தனம் | வெற்றி | புகழ் | இலாபம் | முயற்சி | உழைப்பு | சுகம் | நம்பிக்கை |

# வேலை நிறுத்தத்துக்கு கல்வி அமைச்சே காரணம்

கொழும்பு, ஏப். 10

பல்கலைக்கழகக் கல்வி சாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உயர் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் நாடளாவிய ரீதியில் சகல பல்கலைக்கழக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வை உடனடியாக வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பல்கலைக்கழகங்களின் வழமையான கல்வி நடவடிக்கைகள் மாத்திரமன்றி, ஆய்வு நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளது. ஊழியர்களின் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைக்கு முறையற்ற சில ஒப்பந்தங்களே காரணம் எனவும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஆ)



## போர்க் கப்பல் கொள்வனவு: ரஷ்யா பயணமானார் கபில!

கொழும்பு, ஏப். 10

போர்க்கப்பல் கொள்வனவு தொடர்பாகப் பேச்சு நடத்துவதற்காக பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, பாதுகாப்பு அதிகாரிகளின் குழுவொன்றுடன் ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் குழுவில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் சரத் குமார, கடற்படைத் தளபதி அட்மிரல் ரணசிங்க ஆகியோரும் அடங்கியுள்ளனர்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்ட 500 மில்லியன் டொலர் கடன் திட்டத்தில் எஞ்சியுள்ள தொகையைக் கொண்டு, 158 மில்லியன் டொலர் பெறுமதியான போர்க் கப்பலை ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் ஆயுத ஏற்றுமதி நிறுவனமான, ரொஸ்ரெக் மூலம் இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்படவுள்ளது.

அதேவேளை, ரஷ்யாவிடம் இருந்து, MI 171 HS ரகத்தைச் சேர்ந்த பாவிக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட 10 உலங்கு வானூர்திகளையும் இரண்டு IC 76 MD சரக்கு விமானங்களையும், ஆறு, SU 30 போர் விமானங்களையும் கொள்வனவு செய்யவும் அரசு திட்டமிட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு இந்தியாவுக்காக, SU 30 போர் விமானங்களை ரஷ்யா தயாரித்திருந்தது. பின்னர் அது பெலாரசுக்கு விற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## ஜேம்ஸ் பீரிஸ் – பிரதமர் சந்திப்பு



கொழும்பு, ஏப். 10

பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிரபல திரைப்பட இயக்குநர் கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸை நேற்றுமுன்தினம் சந்தித்துள்ளார்.

திம்பிரிகஸ்ஸாய பகுதியில் அமைந்துள்ள பீரிஸின் வீட்டில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இருவருக்கும் இடையில் நட்புறவு ரீதியாக கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் பிரதமரின் பாரியாரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 246 ஆசிரியர்களுக்கு வருடாந்த இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 10

வடக்கு மாகாணத்தில் 246 ஆசிரியர்கள் வருடாந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என வடமாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு பாடசாலையில் 5 வருடங்கள், அல்லது அதற்கு மேல் சேவையாற்றியவர்களுக்கு இவ்வாறு வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டு வருகின்றது. நடப்பு ஆண்டில் 246 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி வலயத்தில் 53 ஆசிரியர்களும், மடு வலயத்தில் 35 ஆசிரியர்களும், மன்னார் வலயத்தில் 14 ஆசிரியர்களும், முல்லைத்தீவு வலயத்தில் 27 ஆசிரியர்களும், துணுக்காய் வலயத்தில் 35 ஆசிரியர்களும், வவுனியா வடக்கில் 38 ஆசிரியர்களும், வவுனியா தெற்கில் 12 ஆசிரியர்களும், தீவகத்தில் 29 ஆசிரியர்களும், வலிகாமத்தில் ஓர் ஆசிரியரும், வடமராட்சியில் ஓர் ஆசிரியரும், தென்மராட்சியில் ஓர் ஆசிரியருமாக மொத்தம் 246 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான இடமாற்றம் கடந்த 6 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். அவர்களுக்கான இடமாற்றத் தெரிவுகள் நடைபெற்று மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## மீன் விலை அதிகரித்தால் சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஏப். 10

புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் சந்தைகளில் மீன் விலை அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான துரித நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர கடற்தொழில் கூட்டுத்தாபனத்தைப் பணித்துள்ளார்.

சந்தைகளில் அதிக விலையில் மீன்கள் விற்கப்படுவதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து, நுகர்வோர் சுரண்டப்படுவதைத் தவிர்க்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஆ)

## படையினருக்கு தாராள வசதிகள்

### மைத்திரி உறுதி



கொழும்பு, ஏப்.10

"தாய் நாட்டுக்காக தமது கடமைகளை நிறைவேற்றும் படையினருக்கு அரசாங்கம் அனைத்து வசதிகளையும் வழங்கும்" என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மாதுரு ஓய இராணுவ பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்று வெளியேறும் நிகழ்வு முப்படைகளின் தளபதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

"பாதுகாப்புப்படையினர் தமது சேவைகளை நிறைவேற்றும் போது ஆயுதங்களினால் மட்டுமன்றி அறிவு, இயலுமை, ஆக்கத்திறன் என்பவற்றினாலும் பலம்பெற்று அவர்களது திறமைகளை வெளிக்காட்ட வேண்டும். இதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் சலுகைகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்." எனக் குறிப்பிட்டார்.

மாதுரு ஓய இராணுவ பயிற்சிப் பாடசாலையின் 48ஆவது ஆரம்ப பயிற்சிப் பாடநெறியை பயின்ற ஏழு அதிகாரிகளும் ஏனைய பதவி நிலைகளைச் சேர்ந்த 189 பேரும் பயிற்சிகளை நிறைவுசெய்து வெளியேறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் துயிலும் இல்லத்தில் அஞ்சலி



கிளிநொச்சி, ஏப்.10

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச சபைக்கு சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டுள்ள சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் பதினொரு உறுப்பினர்களும் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர் பிரதேச சபைக்குச் சென்றுள்ளனர்.

பிரதேச சபையின் உறுப்பினர்களும், முன்னாள் போராளிகள் சிலரும் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு நேற்றுக் காலை 6 மணியளவில் சென்று விளக்கேற்றி மலர் தூவி அகவணக்கம் செலுத்திய பின்னர் சபையின் முதலாவது கூட்டத்துக்குச் சென்றனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள 11 உறுப்பினர்களில் பலர் மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் . அத்தோடு அனைவரும் போராட்டக் காலங்களில் அதிக பங்களிப்புச் செய்தவர்கள் என்ற வகையிலும் நாங்கள் மாவீரர்களின் தியாகத்தை மதித்து எங்களின் மக்களுக்கான பணியை முன்னெடுக்கவுள்ளோம் என 2 மாவீரர்களின் சகோதரியும், முன்னாள் போராளியுமான தயாபரன் சர்மிளா தெரிவித்தார். (ஆ)



# 19, 20, 21, 22 ஆம் திகதிகளில் சைவப்புலவர் பரீட்சைகள் !

யாழ்ப்பாணம், ஏப்.10

2018 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளம் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் 19 , 20 , 21 ,22 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, லண்டன் ஆகிய பரீட்சை நிலையங்களில் இடம்பெறவுள்ளன என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார்.

"அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் இந்தப் பரீட்சைகளில், எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை சாத்திரம், 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலக்கணம் மற்றும் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரலாறு , இலக்கியம் ஆகிய பாடங்களும், 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உரை நடைப் பாடமும் இடம் பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்திலும், மட்டக்களப்பில் ஆணைப்பந்தி பெண்கள் மகா வித்தியாலயத்திலும், கொழும்பில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும், திருகோணமலையில் இராமகிருஷ்ண மிசன் கோணேஸ்வரா இந்துக்கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 56 இளம் சைவப்புலவர் பரீட்சார்த்திகளும், 32 சைவப்புலவர் பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 88 பரீட்சார்த்திகளும், மட்டக்களப்பில் 34 இளம் சைவப்புலவர் பரீட்சார்த்திகளும் , 18 சைவப்புலவர் பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 52 பரீட்சார்த்திகளும், கொழும்பில் 15 இளம் சைவப்புலவர் பரீட்சார்த்திகளும், 19 சைவப்புலவர் பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 34 பரீட்சார்த்திகளும், திருகோணமலையில் 8 இளம் சைவப்புலவர் பரீட்சார்த்திகளும் , 7 சைவப்புலவர் பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 15 பரீட்சார்த்திகளும், லண்டனில் 6 சைவப்புலவர் பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள்.

113 இளம் சைவப்புலவர் பரீட்சார்த்திகளும், 82 சைவப்புலவர் பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 195 பரீட்சார்த்திகள் இந்த வருடப் பரீட்சைக்கு தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை அனுமதி அட்டைகள் தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சை தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள இல -153 கே.கே.வீதி கொக்குவில் என்ற தபால் முகவரிக்கோ அல்லது தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை 0212223458, தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் கந்தசத்தியதாசன் 0776132176 ஆகியோரின் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும்." என்றும் தெரிவித்துள்ளார்.

# குளவிக் கொட்டு: 10 பெண்கள் பாதிப்பு!

பொகவந்தலாவ,ஏப். 10

பொகவந்தலாவ - பொகவானைத் தோட்டப் பகுதியின் 5 ஆம் இலக்கத் தேயிலை மலையில், கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 10 பெண் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி உள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தபோது, மலை அடிப்பகுதியில் இருந்த குள்விக் கூடு கலைந்து வந்து தாக்கியது எனப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர். (ஆ)



# நீண்ட கால அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும்

சாவகச்சேரி, ஏப். 10

குறுங்காலத் திட்டங்களை விடுத்து நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடிய தூர நோக்குச் சிந்தனையில் அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கந்தையா வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு உதயசூரியன் கிராமத்தின் நிலவரங்களைப் பார்வையிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு பிரதேசத்தில் கடற்கரை ஓரமாக உள்ள உதய சூரியன் கிராமத்தில் வீட்டுத் திட்டங்களை வழங்குவதென்பது சிறிது காலம் நிலைத்து நிற்கும் செயற்பாடாகவே காணப்படும். அதனை விடுத்து வேறு பகுதியில் இந்தக் கிராம மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த தூர நோக்கச் சிந்தனை கிராம மக்களைக்காலா காலமாக சிறப்பாக வாழ வைக்கும். அத்துடன் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் போது முக்கியமாக தேவைப்பாடுகள் உள்ள பிரதேசத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலும் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் என்ற சிந்தனையை விடுத்து, உண்மையில் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு சேவை செய்ய சபை உறுப்பினர்கள் அனைவரும் முன்வர வேண்டும். அபிவிருத்தியை மேற்கொள்ளும்போது தன்னிச்சையாக செயற்படாமல் துறை சார்ந்த வல்லுநர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுச் செயற்பட வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார்.

# தீர்ப்பு வழங்கவில்லை மனதளவில் விவாகரத்தே!

## அரசை சாடுகிறார் நாமல்



பெலியத்த, ஏப். 10

அரசாங்கத்தின் இந்தக் காதல் பயணம் வெற்றி பெறாது. விவாகரத்து வழக்கு தற்போது தாக்கல் செய்யப்பட்டு விட்டது. வழக்கில் தீர்ப்பு வழங்கப்படா விட்டாலும், மனதளவில் விவாகரத்து ஆகிவிட்டது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பெலியத்த பிரதேச சபையின் புதிய உறுப்பினர்கள் தமது பணிகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"தேர்தலை ஒத்திவைக்க பயன்படுத்தப்பட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி தயவு செய்து தேர்தலை நடத்துங்கள். மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் மக்களின் அரசாங்கம் ஒன்றை அமைக்கத் தேர்தலை நாங்கள் பயன்படுத்துவோம். ஐக்கிய தேசியக் கட்சியினர் குழுக்களை நியமித்து மறுசீரமைப்பு பற்றி பேசி வருகிறனர்.

ஜனாதிபதி முற்றாக தனது கட்சியின் கொள்கைகளை காட்டிக் கொடுத்துள்ளார். தற்போது நாட்டில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவரின் பிரச்சினைகள் பற்றியே பேசப்படுகின்றன. மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசப்படுவதில்லை. இவர்கள் தற்போது தமது இரண்டாவது காதல் பயணம் பற்றி பேசி வருகின்றனர்." எனவும் அவர் தெரிவித்தார். (ஆ)

# எப்பவும் ஒரு எட்டப்பன் எங்கடை தலைவிதி உதுதான்

பேந்தும் பார் பிரட்டிறதை. முந்திச் சொன்னவங்கள் ரணில் கையெழுத்துப் போட்டு ஒத்துகொண்டாப் பிறகு தான் நம்பிக்கை இல்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்கிறதுக்குத் தாங்கள் சம்மதிச்சவையள் எண்டு. ஆனால் இப்ப சுமந்திரன் என்ன சொல்லுறார் எண்டு பாருங்கோவன்.

ரணிலின்ரை கையெழுத்தோடை ஒரு ஒற்றையைத் தங்களுக்குக் காட்டினவை எண்டு அடிச்சுச் சத்தியம் செய்யினம் அண்டைக்கு அங்கை இருந்த எம்.பி.மார். அந்த ஆவணம் என்னெண்டு கேக்க "கூட்டமைப்பின்ரை கோரிக்கையை நிறைவேற்றுவன் எண்டு ரணில் எழுதித் தந்த சத்தியக் கடதாசிதான் அது" – எண்டு சம்பந்தர் சொன்னவராம். அதை இப்ப சுமந்திரன் இல்லை எண்டு சொல்லுறாராம். அப்ப அண்டைக்குக் காட்டின கடதாசி என்ன? – எண்டு முதலி கேக்கிறான். அப்ப அந்தக் கூட்டத்திலை இருந்த 13 பேற்றை 26 கண்ணும் பொய் எண்டு சுமந்திரன்ரை இரண்டு கண்ணும் சொல்லுதோ?

சண்டை நடக்கேக்கை சந்திரிகா செய்த விளையாட்டு ஒண்டு தெரியுமே? பிரபாகரனுக்குக் காட்ட எண்டு 10 வர்த்தமானியள் அடிச்சு ஐஞ்சைக் குடுத்து அவ அனுப்ப, அதைக் கொண்டு போன ஆளிட்டை பிரபாகரன் கேட்டவராம் மிச்ச ஐஞ்சை எங்கை வைச்சிருக்கிறா எண்டு. அது மாதிரித்தான் உதுகும். அப்ப ஒண்டில் ஒரு காயிதம் மாத்திரம் அடிச்சு காட்டிப் போட்டு அலுவல் முடிஞ்ச உடனை கிழிச்செறிஞ்சிருக்க வேணும். இல்லாட்டி ரணிலுக்குத் தெரியாமல் கூட்டமைப்பின்ரை எம்.பிமாரைச் சம்மதிக்கப் பண்ணுறதுக்காக போலியா ஒண்டை எழுதிக் காட்டி இருக்க வேணும். முன்னம் சண்டைக் காலத்திலை மண்ணெண்ணைப் போமிற்றுக்குக் கள்ளக் கையெழுத்து வைச்சு வித்தமாதிரி இதுவும் ஒரு விளையாட்டோ தெரியேல்லை.

நான் நினைக்கிறன் கூட்டமைப்பு எம்.பிமாரை ரணிலுக்குச் சப்போட் பண்ண வைக்கிறதுக் காக ஆரோ திட்டமிட்டு இந்த நாடகத்தை அரங்கேற்றி இருக்கினம். அந்த நாடகத்தை எழுதித் தயாரிச்சு மேடை ஏற்றின தெம்மாடி ஆர் எண்டதுதான் இப்ப கதை? எந்த அடிப்படையிலை இவையளை ஏமாத்தினவை. அவைதான் ஏமாத்தினவை எண்டால் சம்பந்தற்றையும், சுமந்திரன்ரையும் மதி எங்கை போட்டுது? வாங்கி பைல் பண்ணி இருக்க வேணுமெல்லே?

இப்ப கன நாளா ஏமாத்திறாங்கள் எங்களை எண்டு சொல்லுறது, உண்மையோ? இல்லாட்டிப் பொய்யோ? எண்டு தெரியேல்லை. வோட்டைப் போட்டு எங்கடை பிரநிதிகள் எண்டு பாளிமெண்டுக்கு அனுப்ப அங்கை போய் இழிச்சவாயளா இவை இருந்திட்டு வாறதெண்டால்? சும்மாவே! அவையளை வேணுமெண்டால் அவை இழிச்சவாயளாக் கட்டும். ஆனால் எங்களையும் எல்லே சேத்து "தலைக்கை ஒண்டும் இல்லாததுகள்" எண்டு நினைக்கப் போறாங்கள்.

ரணிலிட்டையும், மைத்திரியிட்டையும், மகிந்தாவிட்டையும், சந்திரிகாவிட்டையும் சம்பந்தனும், சுமந்திரனும் வேணுமெண்டால் ஏமாறட்டும். தயவு செய்து எங்களை ஏமாத்த வேண்டாம் எண்டதுதான் என்ரை கதை. எங்களை வெருளியள் எண்டு அவங்கள் நினைக்காட்டில் சரி.

நாங்கள் வாக்களிச்சு அனுப்பின பிரதிநிதியளை ஏமாத்திறது, வாக்களிச்ச சனத்தை அதாவது எங்களை ஏமாத்திற மாதிரித்தானே? அப்ப உண்மையாத்தான் ரணில் உதிலை ஏமாத்தி இருந்தால் பிறகு உவை ஏன் ரணிலோடை ஒட்டிக் கொண்டு நிப்பான்? இப்பிடி ஒரு சின்ன வேலையைக் கூடச் செய்யத் தைரியமில்லாத ரணிலே சிங்களச் சனத்திட்டைப் போய் எங்கடை பிரச்சினையளைச் சொல்லி தீர்வை வாங்கித் தரப்போறார்? இல்லாட்டி தமிழ் சனத்தை நின்மதியாச் சீவிக்க விடப்போறார்?

ஆனாலும் எங்களைக் காட்டிக் குடுக்க எண்டு, இராமாயணத்திலையும், மகாபாரதத்திலையும் வந்த மாதிரி துரோகியள் அப்பப்ப வந்தபடி இருக்கிறாங்கள். இப்ப அப்புக்காத்து வடிவிலை ஒராள். ஆள் அங்காலையோ? இஞ்சாலையோ? எண்டு இன்னும் வடிவாத் தெரியேல்லை. அப்பப்ப சின்னஞ் சிறுசுகளுக்கு இனிப்பு வாங்கித்தாறன் எண்டு பேக்காட்டுற மாதிரி மாவைக்குச் சொல்லிக் கொள்ளுறது "அடுத்த வட மாகாண முதலமைச்சர் நீதான்" எண்டு. அதுக்கும் சாகிறதுக்குள்ளை ஒருக்கா அந்தக் கதிரையிலை தான் இருந்திடுவம் எண்ட கனவு. ஆனால் அந்த நேரம் பாத்துக் கதை சொல்லிப்போட்டு ஆனோல்ட்டையோ இல்லாட்டி அந்தோனி முத்துவையோ தான் அப்புக்காத்து கொண்டு வருவார். அப்ப மாவை வடிவாப் போத்துக் கொண்டு படுக்க வேண்டிவரும் எண்டதுதான் என்ரை கணிப்பு. என்ன நடக்கப்போகுதோ? ஈஸ்வரா?

- வில்லங்கம் விநாசி

எதிரொலி Ethiroli

செவ்வாய், 10 ஏப்ரல் 2018

# லசந்த கொலை வழக்கு: சந்தேகநபர்கள் மறியலில்!

கொழும்பு, ஏப்.10

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய இரண்டாம் மற்றும் மூன்றாம் சந்தேக நபர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸ்சை மேலதிக நீதவான் சோலச்சனி அபே விக்ரம வீரசிங்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய இரண்டாவது சந்தேக நபர், கொலை சம்பவம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில், கல்கிஸ்சை பொலிஸ் நிலையத்தின் குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய திஸ்ஸ சுகதபால என்பதுடன் இரண்டாது சந்தேக நபர் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார ஆவார்.

சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட மேலதிக நீதவான், முதலாவது சந்தேக நபரான இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி பிரேமானந்த உதுலாகமவை ஜூன் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுகவீனமான நிலைமையில் இருப்பதால், அவ்ரை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

எனினும் இது சிறைச்சாலை விவகாரம் என்பதால், தன்னால் உத்தரவொன்றை பிறப்பிக்க முடியாது என மேலதிக நீதவான் தெரிவித்துள்ளார்.(அ)

# திருமலை நகராட்சி கூட்டமைப்பு வசம்

கொழும்பு, ஏப்.10

திருகோணமலை நகராட்சி மன்றத்தை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் எம்.வை.எம்.சலீம் தலைமையில் இவ்வாண்டுக்கான முதல் அமர்வு நேற்று நடைபெற்றது.

இதில் நகராட்சி மன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நாகராசா இராசநாயகம் தலைவராகவும், உப தலைவராக சேனாதிராஜா சிறிஸ்கந்தராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் தெரிவின் போது பொதுஜன பெரமுனவின் சார்பில் பி.சுசந்த முன்மொழியப்பட்ட போதும் பகிரங்க வாக்கெடுப்பில் 4 வாக்குகளை மட்டும் அவர் பெற்றுக் கொண்டார். இதன்போது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் 02 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவரும் நடுநிலை வகித்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முன்மொழியப்பட்ட நாகராசா இராசநாயகத்துக்கு 17 வாக்குகள் கிடைத்து அவர் தலைவராக மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் பிரகடனப்படுத்தப்பட்டார்.

இந்த அமர்வின் போது கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் பிரசன்னமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# விபத்துப் பலி 476 பேர்

கொழும்பு, ஏப்.10

இவ்வருடம் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட விபத்துக்களில் 476 பேர் உயிரிழந்தனர். இதில் அதிகமான உயிரிழப்புக்கள் மோட்டார் சைக்கிள் விபத்துக்களாலேயே இடம்பெற்றுள்ளதாக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் 180 பேரும், பாதசாரிகள் 139 பேரும், பயணிகள் 70 பேரும் ,சாரதிகள் 39 பேரும் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

# வட்டுவாகலில் முகாம் அகற்றம்

முல்லைத்தீவு, ஏப்.10

முல்லைத்தீவு -வட்டுவாகல் நந்திக்கடல் பகுதியில் உள்ள இராணுவக் கண்காணிப்பு முகாம் மற்றும் உணவகம் என்பன இராணுவத்தினரால் அகற்றப்பட்டுள்ளன .

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது வட்டுவாகல் பகுதியை கைப்பற்றிய இராணுவத்தினர் முல்லைத்தீவு-பரந்தன் பிரதான வீதிப் போக்குவரத்தைக் கண்காணிப்பதற்காக குறித்த முகாமை நந்திக்கடல் பகுதியில் அமைத்திருந்ததோடு உணவகம் ஒன்றினையும் அமைத்திருந்தனர்.

இந்த நிலையில், 9 வருடங்களின் பின்னர் இந்தக் கண்காணிப்பு முகாம் இராணுவத்தினரால் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டுள்ளது. (அ)

## தொடர்ச்சிகள்

### கேடயத்தை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னரே முன்னாள் எம்.பி சந்திரகுமாரால் களமிறக்கப்பட்ட கேடயம் சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழுவினர் வெளிநடப்புச் செய்தனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுக்கான முதல் அமர்வு , கரைச்சிப் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

முதலில் தவிசாளர் தெரிவுக்கான முன்மொழிவுகள் இடம்பெற்ற போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் அருணாசலம் வேழமாலிகிதன் முன்மொழியப்பட்டார். இதன் போது சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் உறுப்பினர் ஜ.மோகன்ராஜ் எழுந்து வேழமாலிகிதனை முன்மொழிந்தமை, தகுதியற்ற தவிசாளர் முன்மொழிவு எனத் தெரிவித்து த.ரஜனிகாந் என்பவரை மாற்றுத் தெரிவாக முன்மொழிந்தார்

இதன் போது வாக்கெடுப்பு இரகசியமாக நடத்தப்பட வேண்டும் எனக் கோரப்பட்ட போது அதுவும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு பெரும்பான்மையின் அடிப்படையில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பில் தமிழரசுக் கட்சியின் 17 உறுப்பினர்களும், சுதந்திரகட்சியை சேர்ந்த இருவரில் ஒருவரும் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த உறுப்பினர் ஒருவரும் இணைந்து 19 உறுப்பினர்கள் வேழமாலிகிதனுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மாற்றுத் தெரிவான ரஜனிகாந்துக்கு சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த 11 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவரும், சிறிலங்கா சுந்திர கட்சியை சேர்ந்த ஒருவரும் என 13 பேர் வாக்களித்தனர்.

இந்த நிலையில் ஆறு மேலதிக வாக்குகளால் அ. வேழமாலிகிதன் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யபட்டார்.

உபதவிசாளர் தெரிவின் போது தமிழரசு கட்சியின் சி. தவபாலனுக்கும், சுயேச்சைக் குழுவின் த.செல்வராணியும் முன்மொழியப்பட்டனர். இதுவும் பகிரங்க வாக்கெடுப்பு விடப்பட்டது. இதில் தமிழரசுக் கட்சியின் 17 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினருமாக 20 பேர் தவபாலனுக்கும், சுயேச்சைக் குழுவின் 11 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவரும் இணைந்து 12 பேர் செல்வராணிக்கும் வாக்களித்தனர்.

இந்த வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், ஈ.பி.டி.பியும் நடுநிலைமை வகித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

### அடுத்த... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபைத் தேர்தலில் சி.வி.விக்னேஸ்வரன் கூட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்படமாட்டார். அத்துடன் அடுத்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடுவேனா என்பதும் தெரியாது" என்று சுமந்திரன் கூறியிருந்தார். முதலமைச்சர் வேட்பாளராக தான் களமிறங்கும் தகவலையே இவ்வாறு, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது சந்தேகம் என்று அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை இன்னொரு தகவலையும் அரசியல் ஆய்வாளர்கள் இந்தத் தகவலை உறுதிப்படுத்தும் வகையில் முன்வைத்துள்ளனர்.

2013 வடக்குத் தேர்தல் சமயத்தில், கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் தனக்கு நெருக்கமானவர்களிடம், “சாதாரணமான ஒரு மாகாண சபையெனில், முதலமைச்சர் வேட்பாளராக நான் சேனாதியை நிறுத்தியிருக்கலாம் ஆனால், வடக்கு மாகாண சபை முக்கியத்துவம் மிக்கது. அதற்கு முதலமைச்சராக வருகின்றவர் சர்வதேசத் தலைவர்களோடு சமதையாக உட்கார்ந்து பேச வல்லவராக இருக்க வேண்டும்.

உண்மையில், முதலமைச்சர் வேட்பாளராக நான் சுமந்திரனையே நிறுத்த விரும்பினேன். ஆனால், அரசியலுக்குப் புதியவராக அவர் இருப்பதனால், அவர் இன்னும் சற்று அனுபவத்தினைப் பெறவேண்டியுள்ளது. அதுவரையில், அரசியல் தீர்வினத் தேடும் முயற்சிகளில் அவர் எனக்கு உறுதுணையாக இருப்பார்." என்று தெரிவித்திருந்தார். எனவே தற்போது சுமந்திரன் அரசியல் நெளிவு சுழிவுகளைக் கற்றுக் கொண்டுவிட்டதால், அவரையே முதலமைச்சர் வேட்பாளராகக் கூட்டமைப்பு களமிறக்கவுள்ளதாகத் தெரிகின்றது. (அ)

### வடக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஜனாதிபதியின் கீழான தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு ஊடாக 50 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கு கடந்த வருடம் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்தது. ஜனவரி மாத இறுதிக்காலத்தில் வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் ஏனைய இழுபறிகளால் இந்தப் பணி தாமதிக்கப்பட்டிருந்தது. மூன்று மாதங்களின் பின்னர் ஒருவாறாக இந்தப் பணிகள் முடிவை நெருங்கியுள்ளன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த 10 நிறுவனங்கள் ஒப்பந்தத்துக்கு விண்ணப்பித்திருந்தன. 5 நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டன. தொழில்நுட்பக் குழுவால் அந்த நிறுவனங்கள் கடந்த வாரம் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

தொழில்நுட்பக் குழு தனது இறுதி அறிக்கையை இன்று அல்லது நாளை கேள்விகோரல் சபைக்கு வழங்கும். தொழில்நுட்பக் குழுவின் இறுதி அறிக்கையின் அடிப்படையில் ஒப்பந்தத்தை எந்த நிறுவனத்துக்கு அல்லது எந்த நிறுவனங்களுக்கு வழங்குவது என்று கேள்வி கோரல் சபை தீர்மானிக்கும். இந்த வாரத்துக்குள் இந்தப் பணிகள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

### ஹெலியை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்கும் ஹிரத்த பிரசாத் என்ற மாணவன் நான்கு பேர் பயணிக்க கூடிய ஹெலிகொப்டர் ஒன்றைத் தயாரித்துள்ளார்.

பாடசாலையில் இடம்பெற்ற தொழில்நுட்பக் கண்காட்சிக்காக அவர் அந்தக் ஹெலிகொப்டரைத் தயாரித்துச் சமர்ப்பித்துள்ளார். இந்தக் ஹெலிகொப்டரைத் தயாரிப்பதற்கு அவர் சுமார் மூன்று மாதங்களைச் செலவிட்டுள்ளார். தயாரிப்புக்காக தகடு, இரும்பு, தையல் இயந்திரங்களின் பகுதிகள், கணினி பகுதிகள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளதாக குறித்த மாணவர் குறிப்பிட்டுள்ளார். இந்த மாணவர் இதற்கு முன்னரும் பல புதிய பொறிகளை மேற்கொண்டு பல்வேறு வெற்றிகளை பெற்றுள்ளார்.

தான் தயாரித்த ஹெலிகொப்டரை வானில் செலுத்துவதற்காக அனுமதி வழங்குமாறு குறித்த மாணவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

### 20 ஆயிரம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைப்பிரதேச செயலகங்களில் சேவைகளில் ஈடுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நாடுபூராகவும், மாவட்ட மட்டத்தில் பட்டதாரிகள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதுடன், எதிர்வரும் நாட்களில் இவர்களுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

அதற்கமைய, எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

### புலிகளின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையின் போதே இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

நான்கு தண்ணீர் தாங்கிகளில் வைக்கப்பட்டு, புதைக்கப்பட்ட நிலையில் மைக்ரோ பிஸ்டல் ரவைகள்-3000, கைக்குண்டுகள்- 34, தமிழன் கைக்குண்டுகள் -22,மிதிவெடிகள்- 48, ஆர்.பி.ஜி எறிகணைகள் -7, ஜி.பி.எம்.ஜி. ரவைகள் -2000, விமான எதிர்ப்பு ரவைகள் -1710, டெட்டனேட்டர்கள் - 06, கிளைமோர் -04, அருள் எறிகணைகள் -34, சி4 வெடிமருந்து -48 கிலோ கிராம் என்பனவே மீட்கப்பட்ட வெடிபொருட்களாகும். இவை பாதுகாப்பாக அழிப்பதற்காக விசேட அதிரடிப்படையினரால் எடுத்துச் செல்லப்பட்டன . (அ)

### தமிழும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச மொழிக் கொள்கையை மீறி செயற்படுகின்றமை தொடர்பிலான முறைப்பாடுகளை பதிவு செய்தல் மற்றும் மொழிப் பிரச்சினை தொடர்பில் கையாளும் அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து தீர்மானங்களை மேற்கொள்வார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

### மகிந்த... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக்கட்சிக்கு இடையிலான கூட்டு அரசாங்கம் முடிவுக்கு வரும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சம்பந்தமாக காணப்படும் தற்போதைய அரசியல் சூழலில் தேர்தலில் வெற்றி பெற வாய்ப்பில்லை என்று கட்சியில் பெரும்பான்மையானோர் கருதுகின்றனர்.

தேர்தலில் வெற்றி பெற வேண்டுமாயின் எந்த நிபந்தனைகளாக இருந்தாலும் அதனடிப்படையில், மகிந்த ராஜபக்ச தரப்புடன் இணைய வேண்டும் என்ற கடும் நிலைப்பாடு கட்சிக்குள் ஏற்பட்டுள்ளது" எனவும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார். (அ)

### பிரதமர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டினார்கள். ஆனால் நான் பதவிக்காக துரோகம் செய்ய முடியாது என்று அதை மறுத்துவிட்டேன்" என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். அளுத்கமவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தை 2020ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்சிபீடமேற்றுவதற்காக, தான் தொடர்ந்தும் செயற்படுவதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

# சிரிய ஜனாதிபதி கொடிய மிருகம்!

## ட்ரம்ப் சாடல்









வொஷிங்டன், ஏப்.10

சிரியாவில் அரச படைகளால் நடத்தப்படும் இரசாயனத் தாக்குதல் நடவடிக்கைகளுக்குக் காரணமான அந்த நாட்டு ஜனாதிபதி பஷர் அல் அசாத் என்னும் மிருகத்தை ரஷ்யாவும், ஈரானும் ஆதரித்துவருகின்றன. இந்தத் தாக்குதலுக்கு ஆதரவு வழங்கும் நாடுகளே பொறுப்பேற்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

சிரியாவில் இடம்பெற்ற இரசாயனத் தாக்குதல் தொடர்பில் தனது ருவிட்டர் பக்கத்தில் ட்ரம்ப் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

"சிரியாவின் மதிகேடான இரசாயனத் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட பலர் உயிரிழந்துள்ளனர். தாக்குதல்" நடத்தப்பட்ட பகுதிகளை வெளியுலகத்தினர் பார்க்க முடியாதவாறு அங்கு சிரிய இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதற்கு மிகப்பெரிய விலையைத் தர வேண்டி இருக்கும் ." எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் ஆட்சிக்கு எதிராக உள் நாட்டு கிளர்ச்சியாளர்கள் ஆயுதமேந்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டத்துக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் மறைமுகமாக ஆதரவு தெரிவித்து வருகின்றன.

அதேவேளை, அமெரிக்காவுடன் மோதல் போக்கைக் கடைபிடித்து வரும் ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் ஜனாதிபதி பஷர் அல் அசாத் தலைமையிலான அரசையும், கிளர்ச்சியாளர்கள் மீதான அரசப் படைகளின் தாக்குதலையும் ஆதரித்து வருகின்றன.

கிளர்ச்சியாளர்களின் ஆதிக்கத்தில் இருந்துவரும் கிழக்கு கவுட்டா பத்தியை மீட்பதற்காகச் சிரிய படைகள் உச்சக் கட்டத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. பாதுகாப்புக் கருதி அங்குள்ள பொதுமக்களில் பெரும்பான்மையானவர்கள் வெளியேறி விட்டனர்.

இந்த நிலையில், கிழக்குக் கவுட்டா பகுதிக்கு உட்பட்ட டவுமா நகரில் விமானப்படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர்கள் நேற்றுமுன் தினம் நடத்திய தாக்குதலில் 80 இற்கும் அதிகமானவர்கள் மூச்சுத் திணறி உயிரிழந்ததாக அங்குள்ள போர் நிலவரங்களைக் கண்காணித்து வரும் அமைப்பு தெரிவித்துள்ளது. ஆனால், இரசாயனத் தாக்குதல் தொடர்பில் வெளியாகி வரும் செய்திகளை ரஷ்யா மறுத்துள்ளது.

இந்த நிலையிலேயே, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஆ)

# இரசாயனத் தாக்குதல்: கூடுகிறது ஐ.நா. சபை

நியூயோர்க், ஏப்.10

சிரியாவில் இரசாயனத் தாக்குதல் நடத்திய விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நேற்று கூட்டம்ஒன்று நடைபெற்றது.

கிழக்குக் கவுட்டா பகுதிக்கு உட்பட்ட டவுமா நகரில் விமானப்படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர்கள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 80 இற்கும் அதிகமானோர் மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், இரசாயனத் தாக்குதல் விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக ஐ.நாவின் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

சிரிய அரசு நடத்திய இரசாயனத் தாக்குதல் குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், சுவீடன், போலந்து, நெதர்லாந்து, குவைத், பெரு மற்றும் ஐவரி கோஸ்ட் உள்ளிட்ட நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



# ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, ஏப்.10

ஜப்பான் மேற்குப் பகுதியில் சுமார் 5.8 ரிக்டர் அளவுகோலில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு அருகில் உள்ள ஹோஸ்ன் ஷிமானே பகுதியிலேயே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

பூமிக்கடியில் சுமார் 10 கிலோ மீற்றர் (7.5 மைல்கள்) ஆழத்தில் ஏற்பட்ட இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.8 அலகுகளாகப் பதிவானது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நில நடுக்கதத்தால் ஏற்பட்ட உயிர் சேதம் மற்றும் பொருள் சேதம் தொடர்பில் இதுவரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ஆ)



# ராணி எலிசபெத் நபியின் வம்சாவளி?

லண்டன், ஏப். 10

இங்கிலாந்து ராணி எலிசபெத், இஸ்லாம் மதத்தைத் தோற்றுவித்த முகமது நபிகளின் வம்சாவளி என்ற வரலாற்று ஆய்வறிக்கை வெளியாகி தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 1986 ஆம் ஆண்டு ராணி எலிசபெத், முகமது நபியின் மகள் பாத்திமாவுக்கு இரத்த உறவு எனச் செய்தி வெளியிடப்பட்டது. இதனை அடுத்து, இந்த விடயம் தொடர்பான ஆய்வுக்கு ராணி எலிசபெத்தின் 43 தலைமுறையினர் உட்படுத்தப்பட்டனர்.

தற்போது இந்த ஆய்வறிக்கைக்கு பின்னணியில் உள்ள இரகசியம் இங்கிலாந்தைச் சேர்ந்த சிலருக்கு மட்டுமே தெரியும் எனவும், இந்த நிகழ்வு இஸ்லாமியர்களுக்கு பெருமையான ஒன்று எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இங்கிலாந்தைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் இதை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், இது இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதங்களை இணைக்கும் பாலமாக இருக்கும் என ஆய்வாளர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். (ஆ)

# எதிர்கட்சிகள் இணைந்தால் 2019 இல் மோடி தோற்பார்!

## ராகுல் காந்தி ஆரூடம்



பெங்களூர், ஏப். 10

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தால் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி வாரணாசி தொகுதியில் தோற்பார் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் எதிர்வரும் மே மாதம் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான தேர்தல் பிரசாரம் தீவிரமடைந்துள்ளது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், பா.ஜ.க. தலைவர்களும் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகின்றனர். இந்த நிலையில், நேற்று பெங்களூர் நகரில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"உத்தரப்பிரதேசம் பிகாரில் அண்மையில் நடைபெற்ற மக்களவை இடைத் தேர்தலில்எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டதால் பா.ஜ.க. வீழ்ந்தது. கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட முடிவெடுத்துள்ளோம். தற்போதைய சூழ்நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மிகப் பெரிய பிளவு ஏற்பட்டு கூட்டணி உடைந்து வருகிறது. அது நீண்டகாலத்துக்குத் தொடராது. சிறுபான்மை மக்கள் மத்தியிலும், தலித் மக்கள் மத்தியிலும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு வெறுப்பைத் தூண்டி வருகிறது. மக்களைக் கொல்லும் சம்பவங்களைத் தூண்டி வரும் ஆர்.எஸ்.எஸ். கொள்கைக்கு முடிவு கட்ட வேண்டும்.

பிகார், மேற்கு வங்கம், தமிழகம் ஆகியவற்றில் பா.ஜ.கவுக்கு எதிரான அலை அதிகமாக உருவாகி வருகிறது. பா.ஜ.கவும், பிரதமர் மோடியும் நாட்டை வழிநடத்திச் செல்லும் பாதையில் இருந்து விலகிவிட்டார்கள். ஒரு தனி நபரால் நாட்டை வழி நடத்த முடியாது. மக்களின் கருத்துகளைக் கேட்டு, அவர்களுக்கு ஏற்றாற்போல் பணியாற்ற வேண்டும்." என்று அவர் தெரிவித்தார். (ஆ)

# நான்காவது முறையாகவும் பிரதமராகிறார் விக்டர்!


புதாபெஸ்ட், ஏப்.10

ஹங்கேரியில் சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட பிரதமர் விக்டர் ஆர்பன் நான்காவது முறையாகவும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஹங்கேரி நாட்டில் மொத்தமுள்ள 199 இடங்களுக்கு ஆளும் கட்சியான பிட்ஸ் கட்சி , ஜோப்பிக் கட்சி, இடதுசாரி கூட்டணிக் கட்சிகள் என்பன போட்டியிட்டன.

இதில், ஆளும் கட்சியான பிட்ஸ் கட்சி 134 இடங்களிலும், ஜோப்பிக் கட்சி 26 இடங்களிலும், இடதுசாரி கூட்டணிகள் 20 இடங்களிலும் வென்றுள்ளதாக அந்த நாட்டுத் தேசிய தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் மூன்றில் இரண்டு பங்கு இடங்களைப் பிடித்த பிட்ஸ் கட்சி அங்கு ஆட்சியை அமைக்கிறது. மேலும், பிரதமர் விக்டர் ஆர்பன் நான்காவது முறையாகவும் பிரதமர் பதவியை வகிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)



# தலைப்பாகை கட்டி கின்னஸ் சாதனை

வொஷிங்டன், ஏப்.10

நியூயோர்க் நகரில் உள்ள டைம்ஸ் சதுக்கத்தில், சுமார் 9 ஆயிரம் சீக்கியர்களுக்கு 8 மணி நேரத்துக்குள் தலைப்பாகை கட்டி முடித்ததன் மூலம் புதிய உலக சாதனை பதிவாகி உள்ளது.

அமெரிக்காவில் அவ்வப்போது தாக்குதலுக்கு இலக்காகும் சீக்கியர்களின் மதநம்பிக்கையைப் பிறருக்கும் புரியவைக்கும் நோக்கத்தில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதியை 'டர்பன் தினம்' (சீக்கியர்கள் அணியும் தலைப்பாகை தினம்) ஆக அங்குள்ள சீக்கியர்கள் கொண்டாடி வருகின்றனர்.

இந்தநிலையில், இந்த கின்னஸ் சாதனை பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# சன்றைசர்ஸிடம் மண்டியிட்ட ராஜஸ்தான்

ஹைதராபாத், ஏப்.10

களத்தடுப்பு, பந்து வீச்சு, துடுப்பாட்டம் என்று சகல துறைகளிலும் அசத்திய சன்றைசர்ஸ் அணி, ராஜஸ்தான் ரோயல்ஸை இலகுவாக மண்டியிட வைத்தது.

ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும், ஹைதராபாத் சன்றைசர்ஸ் அணியும் , ஹைதராபாத் ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் நேற்றிரவு மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணித்தலைவர் கேன் வில்லியம்சன் களத்தடுப்பைத் தேர்வு செய்தார். இதனால் முதலில் துடுப்பெடுத்தாடும் நிலைக்கு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தள்ளப்பட்டது.



அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக அணித்தலைவர் அஜிங்கியா ரஹானே, டார்கி ஷோர்ட் ஆகியோர் களமிறங்கினர். ஷோர்ட் 4 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்த நிலையில் ரன் அவுட் ஆனார். அதன்பின் சஞ்சு சாம்சன், ரஹானேயுடன் இணைந்து நிதானமாக ஓட்டங்களைக் குவித்தார். ஆயினும் ராஹானேயை சன்றைசர்ஸ் அணி விட்டு வைக்கவில்லை. 13 ஓட்டங்களுடன் கௌலின் பந்துவீச்சுக்கு ரஹானே பலியானார்.

அவரைத்தொடர்ந்து களமிறங்கிய பென் ஸ்டோக்ஸ் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின் வந்தவர்கள் பெரிய அள்வில் ஓட்டங்கள் எடுக்கத் தவறினர். சஞ்சு சாம்சன் மட்டும் நிதானமாக விளையாடி 49 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 125 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. ராகுல் திரிபாதி 17 ஓட்டங்களும், ஷ்ரேயாஸ் கோபால் 18 ஓட்டங்களும் எடுத்தனர். ஹைதாராபாத் அணி சார்பில் பந்து வீச்சில் ஷகிப் அல் ஹசன், சித்தார்த் கௌல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் இலகுவான இலக்கைத் துரத்திய சன்றைசர்ஸ் அணி, அதிரடி வீரர் சஹாவை 5 ஓட்டங்களில் பறிகொடுத்தது. ஆயினும் பின்னர் ஷிகர் தாவனும் அணித்தலைவர் வில்லியம்சனும் விக்கெட் இழப்பைத் தடுத்தவாறு, ஓட்ட வேட்டையும் நடத்தினர். ஒருமுனையில் வில்லியம்சன் அடக்கி வாசிக்க, மறுமுனையில் ஷிகர் தவான் ஆக்ரோஷமாக ராஜஸ்தானைப் பந்தாடி, வேகமாக அரைச்சதம் கடந்தார். இந்த ஜோடி இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைக் கடந்தது. வெறும் 15.4 ஓவர்களில் அநாயசமாக வெற்றிலக்கை அடைந்து 9 விக்கெட்டுகளால் ராஜஸ்தானை , சன்றைசர்ஸ் வீழ்த்தியது. தவான் 77 ஓட்டங்களையும், வில்லியம்சன் 36 ஓட்டங்களையும் எடுத்து களத்தில் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இரண்டு வருடத் தடைக்குப் பின்னர் பங்குபற்றிய முதல் போட்டியிலேயே ராஜஸ்தான் அணி படு தோல்வியடைந்தமை, அந்த அணி ரசிகர்களுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## சேப்பாக்கம் மைதானத்தைச் சுற்றி கடும் பாதுகாப்பு

சென்னை, ஏப். 10

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்று இரவு நடைபெற உள்ள ஐ.பி.எல். போட்டிகளை காணவரும் ரசிகர்களைக் கண்காணிக்க ரகசிய கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி தமிழகத்தில் போராட்டம் நடைபெற்று வரும் நிலையில், ஐ.பி.எல். போட்டிகள் போராட்டத்தை திசை திருப்பும் என கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

மேலும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரை, தமிழகத்தில் எங்கும்ஐ.பி.எல் போட்டிகள்நடத்தக்கூடாது எனவும் அனைத்து தரப்பில் இருந்தும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ரசிகர்களைக் கண்காணிக்க ரகசியக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் கருப்பு நிற உடை, பட்ஜ் அணிந்து வருபவர்களை அனுமதிக்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் சென்னையைச் சென்றடைந்த சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர்கள், தனியார் நட்சத்திர விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். விடுதியைச் சுற்றிலும் உதவி ஆணையர் தலைமையில் 60 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)



## வட மாகாண வலைப்பந்தாட்டம்: யாழ். மாவட்டம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 10

வட மாகாண மாவட்டச் செயலக அணிகளுக்கிடையிலான பெண்கள் பிரிவு வலைப்பந்தாட்டத்தில் யாழ். மாவட்டச் செயலக அணி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியனானது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தி வந்த வலைப்பந்தாட்டத் தொடரில், பெண்களுக்கான இறுதியாட்டம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்டச் செயலக அணி மோதியது.

ஆட்டத்தைத் தனது கைக்குள் வைத்திருந்த யாழ். மாவட்ட செயலக அணி, 52:14 என்ற புள்ளிகள் கணக்கில் அபார வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தையும் தனதாக்கிக்கொண்டது. (ஐ-20)

**ஐ.பி.எல். இன்றைய போட்டி**
**சென்னை சூப்பர் கிங்ஸ்**
**எதிர்**
**கொல்கத்தா நைட் ரைடர்ஸ்**
**(இரவு 8 மணி)**

## இவ்வளவு அள்ளுகிறார்களா?



சென்னை, ஏப். 10

ஐ.பி.எல். போட்டியில் வீரர்கள் அடிக்கும் சிக்ஸர்கள், பௌண்டரிகள் எந்த அளவுக்கு ரசிகர்களைக் குஷிப்படுத்துமோ, அதே போன்று விக்கெட் விழும்போதும் 'சியர்ஸ் கேர்ள்ஸ்' போடும் ஆட்டம் ரசிகர்களின் கண்களுக்கு நிச்சயம் விருந்தளிக்கும்.

ஒரு போட்டிக்கு ஆட்டம் போட ஒவ்வொருவருக்கும் இந்திய மதிப்பில் ரூ.6,000 முதல் 12,000 சம்பளமாம். இதில் அவர்களுடைய அணி வெற்றி பெற்றால் கூடுதல் 'போனஸ்' வேறு கிடைக்கும். இந்தச் சம்பளம் போட்டி நடைபெறும் நான்கு மணி நேரத்துக்கு மட்டுமே.

அதுமட்டுமின்றி வெற்றி பெற்ற அணி நடத்தும் வெற்றிவிழா கொண்டாட்டத்தில் கலந்து கொள்பவர்களுக்கு கூடுதலாக ரூ.12,000 வழங்கப்படும்.

இவற்றுடன் போட்டோ ஷூட்டில் கலந்து கொண்டால் அதற்குத் தனி சம்பளம். 8 அணிகள் உள்ள நிலையில், ஒவ்வொரு அணியைச் சேர்ந்த சியர்ஸ் பெண்களுக்கு அந்த அணிக்கு ஏற்றவாறு சம்பளம் வழங்கப்படுகிறது.

**டில்லி டேர்டெவில்ஸ்**

வெள்ளை நிற ஆடையில் துள்ளும் இப்பெண்கள், ஒரு போட்டிக்கு மட்டும் ரூ.9, 700 சம்பளம் வாங்குகிறார்கள். ஒரு வருடத்துக்கு 2.5 இலட்சம்.

**சென்னை சூப்பர் கிங்ஸ்**

சிறந்த அணியான சென்னை சூப்பர் கிங்ஸ் , மஞ்சள் நிற ஆடையுடன் தோன்றும் இப்பெண்கள் ஒவ்வொரு போட்டிக்கும், ரூ.10,000 சம்பளம் வாங்குகிறார்கள். ஒரு வருடத்துக்கு ரூ.2.6 இலட்சம்.

**சைன்ரைசர்ஸ் ஹைதராபாத்**

தங்கநிறத்திலான ஆடை அணிந்திருக்கும் இப்பெண்கள், ஒரு போட்டிக்கு 9,500 சம்பளம் வாங்குகிறார்கள். ஒரு வருடத்துக்கு ரூ.2.5 இலட்சம் ஆகும்.

**கிங்ஸ் லெவன் பஞ்சாப்**

வெள்ள நிற ஆடை அணிந்திருக்கும் இப்பெண்கள், ஒரு போட்டிக்கு ரூ.9,500 சம்பளம் வாங்குகிறார்கள். ஒரு வருடத்துக்கு ரூ.2.5 இலட்சம் ஆகும்.

**ராஜஸ்தான் ரோயல்ஸ்**

நீல நிற ஆடை அணிந்திருக்கும் இப்பெண்கள், ரூ.12,000 சம்பளம் வாங்குகிறார்கள். ஒரு வருடத்துக்கு ரூ.3.22 இலட்சம் ஆகும்.

**மும்பை இந்தியன்ஸ்**

ஒரு போர்ட்டிக்கு ரூ. 16,000 சம்பளம் வாங்கும் இவர்கள், இந்த அணி வெற்றி பெற்றால், ரூ.6,500 மேலதிகமாக வழங்கப்படுகிறது. இவர்களது ஆண்டு வருமானம் ரூ.8 லட்சம் ஆகும்.

**ரோயல் சலஞ்சர்ஸ்**

ஒரு போட்டிக்கு 6,500 சம்பளம் வாங்கும் இவர்களது ஆண்டு வருமானம் ரூ.5 லட்சம் ஆகும்.

**கொல்கத்தா நைட் ரைடர்ஸ்**

ஒரு போட்டிக்கு ரூ. 20,000 சம்பளம் வாங்கும் இவர்கள், இந்த அணி வெற்றி பெற்றால், ரூ.6,500 மேலதிகமாக வழங்கப்படுகிறது. இவர்களது ஆண்டு வருமானம் 11 இலட்சம் ஆகும். (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 10.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.